# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 2

FATIMA COLLEGE
LEAD KINDLY LIGHT
MADURAI



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

மதுரை - 18

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 30. | செல்வன் ஜில் டேனியல் தங்கராஜ், பா. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 111 |
| 31. | ஜீவராணி, த. | சமய நல்லிணக்கத்திற்கு இயேசுவின் பங்களிப்பு | 116 |
| 32. | செல்வி ஜூலியட் தேவகிருபை,க. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | 120 |
| 33. | திருமதி ஜெபமேரி, ம. | திருவிவிலியத்தில் ரூத் | 123 |
| 34. | செல்வி ஜெயப்பிரியங்கா, இர. | திருவிவிலிய நீதிமொழிகள் காட்டும் அறச்சிந்தனைகள் | 127 |
| 35. | திருமதி ஜெனிபர், ரா. | கிறித்தவமும் தமிழும் | 130 |
| 36. | ஜேனட் பெல்சியாள், ஞா. | விவிலியத்தில் வாழ்வியல் மதிப்பீடுகள் | 134 |
| | **காப்பியம்** | | |
| வ. எண் | பெயர் | தலைப்பு | |
| 37. | முனைவர் அலமேலு, லெ. | தேம்பாவணியில் இயற்கையும் மனிதமும் | 137 |
| 38. | முனைவர் அலிபிநிஷா, மு. | சிலுவைப்பாட்டில் மனிதம் | 140 |
| 39. | அஜிதா, நா. | தேம்பாவணியில் தாவீதன் இறைவன் மீது கொண்ட பற்று | 145 |
| 40. | திரு. கருணாகரன், கோ. | வளன் சனித்த படலம் கூறும் தாவீது அரசனின் உயர் பண்புகள் | 147 |
| 41. | திருமதி கார்த்திகாயினி, வி. | கிறித்தவக் காப்பியங்கள் காட்டும் மனிதநேயம் | 151 |
| 42. | திரு. சங்கர், இர. | இரட்சணிய மனோகரம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 155 |
| 43. | திருமதி சித்ராதேவி, த. | கிறித்தவ இலக்கியங்களும் மனித மதிப்பீடுகளும் | 159 |
| 44. | முனைவர் சுபாசினி, பெ. | தேம்பாவணி காப்பியத்தில் காணலாகும் அறச்சிந்தனைகள் | 164 |
| 45. | முனைவர் சுஜாதா, க. | அன்னையின் பெருமைகள் | 166 |
| 46. | முனைவர் சூசை ஜெஸிந்தா மெர்ஸி, ஜோ. | தேம்பாவணியில் வளனின் மாண்புகள் | 169 |
| 47. | திருமதி செல்வகனி, ரா. | திருக்காவலூர் அடைக்கல அன்னையின் மேன்மைகள் | 172 |
| 48. | முனைவர் சொர்ணமாலா, சி. | தேம்பாவணியில் வாழ்வியல் அறம் | 176 |
| 49. | முனைவர் தேவதா, ஆ. | தேம்பாவணி காட்டும் மனித மதிப்பீடுகள் | 179 |
| 50. | செல்வி பவித்ரா, மு. | தேம்பாவணியில் அறச்சிந்தனைகளும் இறைக்கொள்கையும் | 183 |
| 51. | பிரேமா கிறிஸ்டி, ஜோ. | கிறித்துவக் காப்பியம் தேம்பாவணி சுட்டும் மனிதம் | 186 |
| 52. | முனைவர் பேச்சியம்மாள், சு. | சிலுவைநாதர் திருச்சரிதம் என்னும் காப்பியத்தின் உத்திகளும் நுட்பங்களும் | 190 |
| 53. | ராஜலெட்சுமி, பெ. | சூசையின் இளமைப் பருவத்தின் மதிப்புகள் | 194 |
| 54. | ரூபி அனன்சியா, ம. | திருத்தொண்டர் காப்பியத்தில் மனித மதிப்பீடுகள் | 197 |
| 55. | முனைவர் லதா, க. | சூசையப்பர் பார்வையில் அன்னை மரியாள் | 202 |

# சூசையப்பர் பார்வையில் அன்னை மரியாள்

**முனைவர் க.லதா,**
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

கிறித்தவக் காப்பியங்களுள் முதலாவதும் முதன்மைத் தன்மை வாய்ந்ததும் தேம்பாவணியாகும். புனித வளனாரைப் பற்றியும் திருக்குடும்ப வாழ்வு பற்றியும் படம் பிடித்துக் காட்டும் சிறந்த தமிழ் இலக்கியம். 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே வீரமாமுனிவரால் எழுதப்பட்ட தேம்பாவணி 3615 விருத்தங்களையும் 90 வகைச் சந்தங்களையும் கொண்டது. வடமொழிக் கலப்புடன் தமிழ்ப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த அந்நாளில் நல்ல செந்தமிழ் நடையில் இத்தாலி நாடு தந்த தமிழர் வீரமாமுனிவர், பண்டைத் தமிழின் பெருமையை அறிந்ததால், இனிய செந்தமிழ் நடையில் தம் பாக்களைத் தந்துள்ளார். பொதுவாகக் கவிகளை நான்கு வகையாகப் பகுப்பர். நினைத்த மாத்திரத்தில் பாடும் ஆசுகவி, இனிய பாடல்கள் பாடும் மதுரகவி, நெடும்பாட்டு, காப்பியம் போல் பாடும் வித்தாரகவி; மடக்கு, சிலேடை யமகம் போன்றவை பாடும் சித்திரகவி. முற்சுட்டிய நான்கு வகைத் திறத்திலும் ஏற்றம் பெற்று விளங்கியவர் வீரமாமுனிவர்.

இவ்வித்தகர் பாடிய தேம்பாவணி இறைவனுக்கு அளிக்கப்பட்ட வாடாத மாலை. புனித வளன் எனப்படும் சூசையப்பரின் வரலாற்றையும் அன்னை மரியாளின் மறை வாழ்வையும் எடுத்து இயம்புவது. சூசையப்பரின் வரலாற்றைச் சொல்லப்புகும் வீரமாமுனிவர்,

**“சூசை உற்றன வரங்கள் தூய்கடல் கடக்கல் இல்லால்**
**ஓசையுற்று ஒழுகு அமிர்தம் உடை கடல்என்ன நண்ணி**
**பூசையுற்று அதனை நக்கப்புக்கு என உளத்தைத் தூண்டும்**
**ஆசையுற்று ஊமனேனும் அருங்கதை அறையல் உற்றேன்”**
**(தேம். பாயி. 4)**

என்கிறார். சூசையப்பர், பெற்ற வரங்களைக் கடலெனக் குறிப்பிடும் வீரமாமுனி, அக்கடலைக் கடத்தல் அரிது என்று அறிந்து, அக்கடலை எட்ட நின்று வணங்கி, கையால் தொட்டு நாவால் நக்கிக் கொள்ள ஆசை கொண்டு இக்கதையைச் சொல்லத் துணிகிறார். இது கம்பனின் ‘ஆசை பற்றி அறையலுற்றேன்’ என்று தொடரை நினைவூட்டுகிறது.

இளவயதிலேயே சூசையப்பர், அறிவிற் சிறந்த பெரியோரிடம் கீழ்க்காணுமாறு வினவுகிறார்.

**“ஈறறம் வழங்கும் வண்ணத்து யாவையும் துறந்த தன்மை**
**பேறறம் என்பக் கேட்டேன்” (தேம், 39)**

என்று தன் மனம் விழைந்த துறவறம் குறித்துக் கேட்கிறார். இளமைப்பருவத்தே தன் சிந்தை எல்லாம் தெய்வ அருளையே நோக்கிச் செலுத்திய சூசை, கடவுளின் ஆணைப்படி அன்னை மரியாளை மணக்கிறார். தன் முப்பத்து மூன்றாவது வயதில், துறவு வாழ்க்கை வாழ்ந்த அவர், இறைவன் திருவடி தவிர வேறொன்றறியாத மரியாளைத் திருமணம் செய்து கொள்கிறார்.

**“மனைக்கு விளக்கம் மடவாள்” (நான்.91)**

என்று நான்மணிக்கடிகை கூறும் இலக்கணத்துக்குச் சான்றாய் விளங்கிய அத் திருமகள்தன் வாழ்வும் தவவாழ்வே. தேனுள்ள மலர்க்கொடியேந்திய சூசையும் மலர்க்கொடியை வென்றவளாகிய மரியாளும் சிறுமனையில் குடியிருந்து வேதம் எனும் கொடி படர்ந்து வளர்வதற்கரிய கொம்பு போன்று, இல்லற துறவறங்களாகிய இரண்டு அறங்களையும் ஒரே அறமாய் உரிய முறையில் தாங்கினர்.

மணம் புரிந்து கொண்ட மாதவன் சூசையும் கன்னி விரதம் பூண்ட மரியாளும் ஈறறமும் ஓரறமாகக் கொண்டு வாழ்ந்த சிறப்பினை ஈறறம் பொருத்து படலத்தில் எடுத்து மொழிகிறார் வீரமாமுனிவர். அங்கு சூசை வாயிலாகக் கன்னி மரியாளின் இயல்புகளைப் புலப்படுத்துகிறார் அவர். சூசையப்பரின் எண்ணங்களில்